**GOVERNMENT OF KARNATAKA**

**KARNATAKA SCHOOL EXAMINATION AND ASSESSMENT BOARD**

6TH CROSS, MALLESHWARAM, BENGALURU – 560 003

**2025 -26 II PUC MODEL QUESTION PAPER – 1**

**SUBJECT : TAMIL** **MAXIMUM MARKS: 80**

**TIME : 03 HOURS** **NUMBER OF QUESTIONS: 49**

---

## பகுதி - ஒன்று

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **10x1=10**

**அ.கொடுக்கப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. எண்ணத்திற்கு எட்டாதவர்

அ. இறைவர் ஆ. மனிதன்
இ. அசுரன் ஈ. வானரம்

2. நற்றிணையின் ஆசிரியர்

அ. நல்லாதனார் ஆ. வெள்ளி வீதியார்
இ. அம்மூவனார் ஈ. இராமலிங்கம் பிள்ளை

3. இராமாயணத்தை வடமொழியில் இயற்றியவர்

அ. கம்பர் ஆ. சாத்தனார்
இ. வால்மிகி ஈ. மணிமேகலை

4. தாமரை மலரில் தோன்றியவன்

அ. பிரம்மன் ஆ. விஷ்ணு
இ. திருமால் ஈ. சிவன்

5. ஆயிரம் ஆயிரம் அலை நாக்குகளுடன் மனிதனின் காலில் கிடப்பது

அ. கடல் அலை ஆ.பேரலை
இ. மணல் ஈ. மழை

6. ஜான் கீட்ஸ் யாரைக் காதலித்தான்

அ. இஸபெல்லா ஆ. சீதை
இ. ஃபானி பிரவுனி ஈ. மணிமேகலை

7. ஷேக்ஸ்பியர் நினைவுக்குக் காணிக்கை என்ற நூலின் ஆசிரியர்

அ. ஷேக்ஸ்பியர் ஆ ஆல்பர்ட்
இ.பென் ஜான்சன் ஈ. ஜி.யு. போப்

8. பக்தி இயக்கத்தில் ஒலித்த மிக முக்கியமான முழக்கம்

அ. ஹரிதாசர் இயக்கம் ஆ.செய்யும் தொழிலே தெய்வம்
வி. கனகதாசர் இயக்கம் ஈ மொழி இயக்கம்.

9. ஜப்பானிய மக்கள் பொறுமைசாலிகள் என்று கூறியவர்

அ.விஸ்வராமன் ஆ. சேதுராமன்
இ. ஜானகிராமன் ஈ. பரசுராமன்


Visit CollegeDekho

10. சரசு முருகேசனிடம் ________வாங்கித் தரும்படிக் கேட்டான்

அ. சேலை ஆ. உணவு

இ. மாத்திரை ஈ. ரொட்டி

**ஆ. கோடிட்ட இடங்களை சரியான விடையைக் கொண்டு நிரப்புக. 5×1=25**

11. வெள்ளத்தனைய ______ நீட்டம். (மலர்/கண்டு)
12. அனுமன் _______யைக் களங்கமில்லாத தோற்றம் உடையவர் என்று கூறுகிறான். (சீதை /திரிசடை]
13. ஒலியின் அளவினை_______என்ற அளவு கோலினால் அளக்கலாம். (டெசிபெல் /மீட்டர்)
14. கலிங்கத்துப் பரணியில் பாடப்பட்ட அரசன் – (குலோத்துங்க சோழன்/சேரன் செங்குட்டுவன்)
15. சாமியாரின் அகராதியில் பெலஹீனம் என்றால்___ (மகிழ்ச்சி/கோபம்)

**இ. பொருத்துக 5x1=5**

| | |
|---|---|
| அ.இராசராச சோழன் | - உச்சிவேளை இராகம். |
| ஆ.. பரிபாடல்கள் | - பந்துவராளி |
| இ. தமிழிசைச் சங்கம் | - தஞ்சை பெரிய கோவில் |
| ஈ. கலிப்பா | - அண்ணாமலைச் செட்டியார் |
| உ. சாரங்கம் | - இசைப்பாடல்கள் |
| | - சங்கராபரணம் |

## பகுதி – இரண்டு [பிரிவு-1]

**அ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக. 2×2=4**

16. ஊக்கமுடையாரது முயர்ச்சியைப் பற்றி குறள் கூறுவனவற்றை எழுதுக.
17. விடியலில் தெருக்கதவைத் திறந்து தலைவி செய்த செயல்கள் யாவை?
18. எத்தகைய வைகறைகள் வர வேண்டும் என்று கவிஞர் மேத்தா கூறுகிறார்?

## பிரிவு -2

**ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை தருக. 2×2=4**

20. காதல் எதனால் பிறக்கிறது என்கிறார் ஜான்கீட்ஸ்?
21. பெரியார் காங்கிரசில் சேர்ந்ததற்கான காரணங்களைக் கூறுக?
22. பக்தி இயக்கத்தில் நிலவிய கிளைகளின் பெயர்களை எழுதுக.

## பிரிவு-3

**இ. ஏதேனும் ஒன்றனுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக. 1x2=2**

23. வேலப்பனின் குடும்பம் கட்டில் வேலையை எவ்வாறு பகிர்ந்து கொள்கிறது?
24. பண்ணைக்காரன் எத்தனை நாட்கள் பயணம் செய்து காசியைச் சென்றடைந்தான்?


Visit CollegeDekho

## பகுதி - மூன்று

**அ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இடம் சுட்டி பொருள் விளக்கம் தருக. 3×3=9**

25. "அலைகிடந்தன ஆழி கிடந்தென நிலைகிடந்தது உடல் நிலத்தே"
26. "காலை முடக்கிக் கொண்டால் போயிற்று"
27. "தண்ணீரில் பெயர் எழுதப்பட்ட ஒரு கவிஞன் இங்கே புதைக்கப்பட்டிருக்கிறான்."
28. "மொழி இன எல்லைகளைக் கடந்த மகா காவியம்"
29. "அவன் தான் கொள்ளி வைக்க வேண்டும்"
30. "மலைப்பாதைகளில் பயணம் செய்யும் போது நெஞ்சடைத்து உடல் விறைத்துக் கொள்ளும்."

## பகுதி – நான்கு

### பிரிவு – 1

**அ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக. 2x4-8**

31. ஊக்கமுடைமை குறித்து திருவள்ளுவர் கூறுவனவற்றை விளக்குக.
32. அனுமன் சீதையிடம் கேட்ட வரங்களை விளக்குக.
33. உள்ளத்தில் காண்பாய் கவிதையில் தோழியின் விடையாகக் கவிஞர் கூறுவனவற்றை எழுதுக.

### பிரிவு-2

**ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக. 2x4-8**

34. ஒலி மாசு உண்டாவதற்கான காரணங்களை விளக்கி வரைக.
35. ஹரிதாசர் பக்தி இயக்கத்தின் தன்மைகளை விளக்கி எழுதுக.
36. மலை என்ற பெயரில் வழங்கும் ஊர்களைப் பற்றி ரா.பி. சேதுபிள்ளை கூறுவன யாவை?

**இ.ஏதேனும் ஒன்றனுக்கு ஐந்து அல்லது. ஆறு வரிகளில் விடை எழுதுக. 1×4=4**

37. ஜப்பான் பிடித்திருக்கிறதா என்று கேட்ட யோஷிகிக்குக் கதையாசிரியர் கூறியவற்றை எழுதுக.
38. அலுவலகம் சென்று வந்த பிறகு முருகேசன் செய்யும் செயல்களை எழுதுக

## பகுதி- ஐந்து

### பிரிவு -1

**அ. கீழ்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக. 1×4=4**

39. நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை ஏய்ந்த தன் கோயிலே எய்துவாளைனப் பாய்ந்தனள்."


Visit CollegeDekho

## பிரிவு - 2

**அ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.** **4×2=8**

**40.சேர்த்தெழுதுக:-**

1. அருள் + உடைய 2. என்று + உலகம்

**41. பிரித்தெழுதுக:-**

1. எனக்களிக்கும் 2. யானிழைத்த

**42. இலக்கணக் குறிப்பு தருக:-**

1. இளமதி - 2. கண்டான் -

**43. கீழ்வரும் தொடர்களை நல்ல தமிழில் எழுதுக.**

1. காலம்பற டிபன் சாப்பிட்டாயா.
2. ஜிம் சென்று வந்தேன்.

**44. சொற்களின் பொருள் வேறுபாடுணர்ந்து வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக.**

(கல்-கள்)

1. மலையைக் _____ என்றும் சொல்லலாம்
2. தேனைக் ______என்றும் சொல்லலாம்.

**45. வல்லெழுத்து மிகும் இடங்கள்.**

1. சால+சிறந்தது 2. தவ+ பெரிது

## பகுதி-ஆறு

## பிரிவு -1

**அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றனுக்கு கட்டுரை வடிவில் விடை எழுதுக.** **1×5=5**

46. அ) நிலத்தடி நீர் மட்டம் குறித்து உன் பார்வையில் எழுதுக.

(அல்லது)

47. ஆ) விலைவாசி உயர்வுக்கான காரணங்களையும் அதை தடுக்கும் வழிமுறைகளையும் எழுதுக.

## பிரிவு -2

**ஆ. கீழ் காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றனுக்கு விடை எழுதுக.** **1×4=4**

48. உனது பள்ளியில் நடைபெற்ற ஆண்டுவிழா குறித்து உன் நண்பனுக்கு கடிதம் வரைக.

49. கீழே கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதுக

1. Strike the rod while it is hot
2. The face is the index of the mind.
3. Failure is the stepping stone to success
4. Look before you leap.


Visit CollegeDekho